


**28. 01. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் வலுவான கொள்கைகள் துரிதமான வேளாண் உற்பத்தி மேம்பாட்டிற்கு வித்திட்டதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. விமான போக்குவரத்து துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியா உலகளாவிய ஏற்றுமதி நாடாக வளர்ச்சி பெறும் என்று சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

3. தமிழ் நாட்டில் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளிகள் அமைவதன் மூலம் கல்வியின் தரம் மேலும் மேம்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.

4. திருச்சி மாவட்டம் கம்பரசம் பேட்டை நீரூந்து நிலையத்தின் மூலம் 19 ஆயிரத்து 343 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

5. இந்தியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 4-வது
20-20 கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் இன்றிரவு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பட்ஜெட் கூட்டத்தொடர்

மத்திய அரசின் வலுவான கொள்கைகளும், செயல்திட்டங்களும் நாட்டில் துரிதமான வேளாண் உற்பத்தி மேம்பாட்டிற்கு வித்திட்டதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று, இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய குடியரசு தலைவர், உணவு மற்றும் தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி சாதனை படைத்ததாக பெருமிதம் தெரிவித்தார்.

நாட்டின் உணவு தானிய உற்பத்தி 350 மில்லியன் டன்னாகவும்,

நெல் உற்பத்தி 150 மில்லியன் டன்னாகவும் அதிகரித்து உலகளாவிய நெல் உற்பத்தி நாடாக இந்தியா உருவெடுத்ததாக குறிப்பிட்டார்.

மீன் உற்பத்தியிலும் நம்நாடு 2-வது பெரியநாடாக உயர்ந்துள்ளது என்று கூறினார்.

சுயசார்பு பாரத பாதையை முன்னெடுக்கும் வகையில் சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கான தேசிய இயக்க செயலாக்கத்தின் மூலம், வேளாண் உற்பத்தி பொருட்களின் இறக்குமதியை குறைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

சமூக நீதியை நோக்கமாக கொண்டு மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக கூறிய அவர், இதன் பயன்களை 95 கோடி மக்கள் தற்போது பெறுவதாக எடுத்துரைத்தார்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள திட்டங்களை விரைவுப் படுத்தி அரசின் நலத்திட்டங்கள் ஒவ்வொரு பயனாளியையும் சென்றடையும் வகையில் பிரகதி திட்டம் தொடங்கப்பட்டதாக கூறியஅவர், சென்ற மாதம்

பிரகதியின் 50-வது கூட்டம் நடைபெற்றது சாதனையாகும் என்றார்.

தொழிலாளர்களின் நலத்தை பாதுகாக்கும் வகையில் புதிய தொழிலாளர் சட்டங்கள் கொண்டுவரப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இளையோருக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் என்றார்.

விண்வெளி சுற்றுலா, இந்தியாவில் தற்போது சாததியமாகி உள்ளதாக கூறிய அவர், இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷீ சுக்லாவின் சர்வதேச விண்வெளி பயணம் இதன் துவக்கம் என்றார்.

வருங்காலங்களில் இந்தியா தனது சொந்த விண்வெளி மையத்தை உருவாக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

வரும் 10 ஆண்டு இறுதிக்குள் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 500 ஜிகாவாட் இலக்கை எட்டும் என்றும் அவர் கூறினார்.

ஊரக பகுதிகளில் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில், வளர்ச்சியடைந்த பாரதம், ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்திற்கான சட்டம் கொண்டுவரப்பட்டு
125 நாட்கள் வேலை உத்தரவாதத்திற்கு வழிகோலப் பட்டுள்ளதாக கூறினார்.

இந்த திட்டத்தால் ஊரக பகுதிகள் வளர்ச்சி அடைவதுடன், விவசாயிகள், கால்நடை விவசாயிகள், மீனவர்களுக்கான புதிய நவீன வசதிகள் உருவாகும் என்றார்.

தொலைதூர பகுதிகள், மலைப்பாங்கான இடங்கள், பழங்குடியினர் வசிப்பிடங்கள் எல்லைப் பகுதிகளுக்கு இலகுவாக செல்லும் வகையில் 70 ஆயிரத்து 200 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலைகள், வடகிழக்கு பகுதிகளில் கட்டமைக்கப் பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் அனைத்து பிரிவுகளிலும், அடிப்படை திட்டங்கள் வலுப்படுத்தப்பட்டு, வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான வலுவான அடித்தளத்தின் ஆண்டாக 2026-ம் ஆண்டு முன்னெடுத்துச் செல்லப்படுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

வந்தே மாதரம் தேசிய பாடலின் 150 ஆண்டுகள் கொண்டாட்டங்களை அவர் எடுத்துரைத்தார்.

மக்களவையில் 2026-27-ம் நிதியாண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கை வரும் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் பொருளாதார ஆய்வறிக்கை நாளை அவையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதற்கட்ட அமர்வு வரும் 13-ம் தேதிவரை நடைபெறும்.

2-ம் கட்ட அமர்வு மார்ச் 9 ம் தேதி தொடங்கி ஏப்ரல் 2-ம் தேதி நிறைவடைகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>ராம் மோகன் நாயுடு</u>

நாட்டின் உற்பத்தி சூழலை மேம்படுத்துவதில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்திவருவதாக சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் பேகம்பட் விமான நிலையத்தில் ஆசியாவின் மிகப்பெரிய Wings India – 2026 உச்சிமாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், இந்த ஆண்டு சிவில் விமான போக்குவரத்து துறைக்கு சிறப்பான ஆண்டாக அமையும் என்றார்.

இத்துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியா உலகளாவிய ஏற்றுமதி நாடாக மேம்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டின் சிவில் விமானத்துறையின் உற்பத்தியையும், வலிமையையும் எடுத்துரைக்கும் தளமாக இந்த மாநாடு திகழ்வதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த மாநாட்டை ஒட்டி நடைபெறவுள்ள சிறப்பு விமான அணிவகுப்பு கண்காட்சியில் போயிங் 787-9 ரக விமானம் உள்ளிட்ட அதிநவீன சிறப்பு விமானங்கள் இடம்பெறும் என்றார்.

வரும் ஆண்டுகளின் தேவையை கருத்தில் கொண்டு உற்பத்தி நடைபெறும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

4 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 20 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>அஜித்பவார்</u>

மஹாராஷ்டிர துணை முதலமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் தலைவருமான அஜித்பவார் பாராமதியில் விமான விபத்தில் இன்று உயிரிழந்தார்.

விமானம் தரையிறங்கும் போது நேரிட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து நேரிட்டதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அஜித்பவாருடன் பயணித்த 2 விமான ஊழியர்கள், 2 பாதுகாப்பு வீரர்களும் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர், அஜித்பவார் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மஹாராஷ்டிராவின் வளர்ச்சிக்கு அஜித்பவார் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூர்ந்துள்ள குடியரசு தலைவர், அன்னாரின் அகால மரணம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது செய்தியில் அஜித்பவார் அடித்தட்டு மக்களுடன் வலுவான தொடர்பை கொண்டிருந்த தலைவர் என்றும், அவரது மரணம் மிகவும் அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. அஸ்விணி

வைஷ்ணவ்,
டாக்டர். எல்.முருகன், முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அஜித்பவாரின் மறைவை ஒட்டி மஹாராஷ்டிர மாநிலத்திற்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டதோடு, 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று அம்மாநில அரசு அறித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>அமைச்சர்கள்</u>

தமிழ்நாட்டில் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிகள் அமைப்பதன் மூலம் கல்வியின் தரம் அடுத்தக்கட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படுதவாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் பெரிய வெண்மணியில் 56 கோடி ரூபாய் மதிப்பில் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு இன்றுஅடிக்கல் நாட்டி பேசியஅவர், வருங்காலத்தில் இத்திட்டம் விரிவுப் படுத்தப்படும் என்றார்.

… வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

<u>அன்பில் மகேஷ்</u>

திருச்சி மாவட்டம் கம்பரசம்பேட்டை நீருந்து நிலையத்தின் மூலம் 19 ஆயிரத்து 343 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இந்த நீருந்து நிலையத்தை இன்று ஆய்வு செய்த அவர், ஜெர்மானிய வங்கி நிதியுதவியின் கீழ் 64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

88 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஆளுநர்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 40-வது பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி 780 பேருக்கு இன்று பட்டங்களை வழங்கினார்.

90 மாணவர்களுக்கு தங்கப்பதங்கங்கள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாகராஜு

நிதி சார்ந்த பிரச்சனைகளில் வெளிப்படை தன்மையை கையாள தொழில்நுட்ப பயன்பாட்டில் அரசு உயர் கவனம் செலுத்துவதாக நிதி சேவை பிரிவு செயலர் திரு. எம். நாகராஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிதி சார்ந்த சர்வதேச மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இப்பிரச்சனைகளை களைய வாராகடன் மற்றும் வங்கி திவால் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு அறிமுகம் செய்ததாக குறிப்பிட்டார்.

இதன்மூலம் ஒரு கட்டமைப்பை உருவாக்கி பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வுகாண வழிவகைகள் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

நிதி சீர்த்திருத்தங்கள் நல்லாட்சியையும், ஆளுமையையும் வலுப்படுத்துவதாக எடுத்துரைத்த அவர், கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன்கள் தொடர்பான 30 ஆயிரம் வழக்குகளுக்கு சென்ற ஆண்டு தீர்வுகாணப்பட்டதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

மாணாக்கர் நேர்மை ஒழுக்கம் அர்ப்பணிப்பு போன்ற அடிப்படை மதிப்புகளை வாழ்க்கையில் உறுதியாக கடைப்பிடிக்க வேண்டுமென விமானப் படையின் துணை மார்ஷல் ஹர்ஜீத் சிங் சிதனா கேட்டுக்கொண்டார்.

திருப்பூர் அமராவதி நகர் சைனிக் பள்ளியில் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி நிறைவு நாள் விழாவில்

உரையாற்றிய அவர், மாணவர்களை வாழ்த்தி கேடயங்களை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று துவக்கி வைத்தார்.

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் குழந்தை பருவ நீரிழிவு நோய்க்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெறுகிறது.

இம்முகாமில் பிறந்த குழந்தை முதல் 18 வயது வரையுள்ள குழந்தைகள் பங்கேற்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>மலை ரயில்</u>

மேட்டுப்பாளையம் உதகை மலை ரயில் போக்குவரத்து இன்று ஒருநாள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

இந்தியா நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 4-வது 20-20 கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖